# திருமண ஒழுங்கில் மணமக்கள் தேர்வும் சம்மதம் பெறலும் - ஓர் இஸ்லாமிய நோக்கு

# An Islamic Perspective in the Choice and Consent of Bride and Groom in the Arrangement of Marriage

*ALM Mujahid, Senior Lecturer, Detp.of Islamic Studies, Eastern University, Sri Lanka.*

*mujahidm@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்**

திருமணத்தை மிகப் புனிதமான ஓர் ஒப்பந்தமாக இஸ்லாம் கருதுவதோடு இஸ்லாமிய சமூக அமைப்பில் அதற்கு பிரதான இடமும் வழங்கப்பட்டுள்ளது. மனித வாழ்வின் அனைத்து விடயங்களுக்கும் மிகவும் நுணுக்கமாக வழிகாட்டியுள்ள இஸ்லாம் திருமண விடயத்திலும் அதிக அக்கறை செலுத்தியுள்ளது. அந்த வகையில் ஒரு முஸ்லிம் திருமணம் முடிக்க எண்ணி பெண் பார்ப்பதிலிருந்து இறுதி வரைக்கும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற முழுமையான வழிகாட்டல்களை அது வழங்கியுள்ளது. ஆண், பெண் இருபாலாரும் தமது வாழ்க்கைத் துணையை சரியாகத் தெரிவு செய்து கொள்வதில்தான் இல்லற வாழ்வின் வெற்றி தங்கியுள்ளது. ஓர் ஆணோ, பெண்ணோ தனக்குரிய துணையைத் தெரிவு செய்யும் போது நடைமுறையில் கவனத்திற் கொள்ளும் பல அம்சங்கள் காணப்படுகின்றன. அவை பணம், பதவி, குலம், கோத்திரம், அழகு போன்றவைகளாகும். திருமணத்தின் போது மணமக்களைத் தெரிவு செய்வதற்குரிய இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களைத் தெளிவுபடுத்துவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். முதலாம் நிலைத்தரவுகள் காழி நீதிபதி, இணக்க சபை உறுப்பினர்கள், பள்ளிவாயல் நிர்வாகிகள் போன்றோரிடம் நேர்காணல் மூலமாகப் பெறப்பட்டுள்ளதோடு இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், கட்டுரைகள், இணையத்தளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வு அல்குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் பண்புசார் பகுப்பாய்வு பிரயோகிக்கப்பட்டுள்ளது. இஸ்லாம் மணமக்களைத் தெரிவு செய்வதற்கு வழங்கியுள்ள வழிகாட்டல்களும் பரிந்துரைகளும் மணவாழ்க்கையில் சந்தோஷமும் புரிந்துணர்வும் ஏற்படுவதற்கு வழிவகுப்பதோடு துணையோடு திருப்தியுறாமல் விவாகரத்துகள் ஏற்படுவதையும் தடுக்கிறது. திருமணம் செய்வதற்கு துணையைத் தெரிவு செய்பவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் இது தெளிவை ஏற்படுத்துவதோடு இத்தலைப்பு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கும் இது வழிகாட்டியாக அமையும்.

**திறவுச் சொற்கள்** : மணமக்கள் தேர்வு, சம்மதம் பெறல், இஸ்லாமியத் திருமணம், துணைத் தெரிவு, பெண் பார்த்தல்

## 1.1 அறிமுகம்

வாழ்க்கைத் துணைத் தெரிவில், நற்குணத்திற்கும் நன்னடத்தைக்கும் முக்கியத்துவமும் முன்னுரிமையும் கொடுக்குமாறு இஸ்லாம் வழிகாட்டுகின்றது. ஓர் இன்பமான திருமண வாழ்வு அமைவதற்கு மணமக்கள் தங்கள் விருப்பத்திற்கேற்றவாறு ஜோடியைத் தெரிவு செய்வது அவசியமானதாகும். வற்புறுத்தல்களுக்காகவோ, நிர்ப்பந்தக்களுக்காகவோ திருமணம் நடைபெறக்கூடாது. ஆண் தனக்கு விருப்பமான மனைவியை வாழ்க்கைக்காகத் தெரிவு செய்து கொள்வதையும் அதேபோன்று ஒரு பெண் தனக்கேற்ற கணவனைத் தெரிவு செய்து கொள்வதையுமே இஸ்லாம் விரும்புகின்றது.

திருமணத்தில் மணமக்களுடைய சம்மதம் மிகவும் முக்கியமானதாகும். எவருடைய வற்புறுத்தலும் இல்லாமல் மணமகன் மணமகளையும் மணமகள் மணமகனையும் விரும்பி, தங்களது சம்மதத்தைத் தெரிவிக்க வேண்டுமென இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. 'நம்பிக்கை கொண்டவர்களே! பெண்களை (அவர்கள் மனப் பொருத்தம் இல்லாத நிலையில்) நீங்கள் பலவந்தப்படுத்தி அனந்தரமாகக் கொள்வது உங்களுக்கு கூடாது.' (அல்குர்ஆன் 04 : 19)

இப்னு அப்பாஸ் (றழி) அறிவிக்கிறார்கள் : (அறியாமைக் காலத்தில்) ஒருவர் இறந்து விட்டால் அவரின் வாரிசுகளே அவரின் மனைவியின் மீது அதிக உரிமை உடையவர்களாக இருந்து வந்தனர். அவர்களில் சிலர் விரும்பினால் அவளைத் தாமே மணமுடித்துக் கொள்ளவும் செய்தார்கள். விரும்பினால் (வேறெவருக்காவது) அவளை மணமுடித்துக் கொடுக்கவோ, திருமணம் முடித்துக் கொடுக்காமல் இருக்கவோ உரிமை கொண்டிருந்தனர். ஆக, அவளுடைய வீட்டாரை விட (இறந்த கணவனின் வாரிசுகளான) அவர்கள் தாம் அவளின் மீது அதிக உரிமையுடையவர்களாக இருந்தார்கள். அப்போதுதான் இது தொடர்பாக ''இறை நம்பிக்கையாளர்களே! (விதவைப்) பெண்களை நீங்கள் பலவந்தமாக அடைவது அனுமதிக்கப்பட்டதன்று. மேலும், அவர்கள் வெளிப்படையான இழி செயல் எதையும் செய்தாலன்றி, அவர்களுக்கு நீங்கள் வழங்கிய (மஹர் போன்ற) வற்றில் ஒரு பகுதியைப் பறித்துக் கொள்வதற்காக அவர்களை நீங்கள் கட்டாயப்படுத்தாதீர்கள்'' எனும் (அல்குர்ஆன் 04:19 வது) வசனம் அருளப்பட்டது. (ஸஹீஹுல் புகாரி : 4579)

திருமணத்தின் போது மணமகளுடைய சம்மதம் கட்டாயம் பெறப்பட வேண்டும். சம்மதம் பெறப்படவில்லையென்றால் அந்த ஒப்பந்தந்தை அந்தப் பெண் முறித்துக் கொள்ளவும் முடியும். பொதுவாக கன்னிப் பெண்கள் வெட்கப்படக்கூடியவர்களாக இருப்பதால் ஓர் ஆண் தன்னை மணமுடித்துக் கொள்ள பெண் கேட்கின்ற போது தன் கருத்தை வாய் விட்டுத் தெரிவிக்க மிகவும் தயங்குவாள். இச்சமயத்தில் அவளுடைய அமைதியான ஒப்புதலே போதுமானதாகும். அமைதியான ஒப்புதல் என்பது மணமகள் அமைதியாக இருப்பது அல்லது தன் தலையை அசைப்பது அல்லது திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பதைக் குறிக்கின்ற வகையில் ஏதேனும் செய்வது போன்றதாகும்.

திருமணம் முடித்த பெண்ணுக்கு வாழ்க்கையில் அனுபவமும் தன் திருமணம் தொடர்பாக முடிவெடுக்கின்ற திறனும் இருக்கும். இதனால் அவள் தன் முடிவை சொல்லால் தெரிவிக்கவும், தன் திருமணம் தொடர்பாக முடிவெடுக்கவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

அவள் தன் பொறுப்பாளரின் முடிவை விட தானே முடிவெடுக்க மிகவும் உரிமையுடையவள். பெண்ணிடம் அவளது சம்மதம் பெறாமல் அவளுடைய தந்தை அவளை மணமுடித்துக் கொடுக்கும் பட்சத்தில் அவள் அத்திருமணத்தை ஏற்றுக் கொள்ளாவிடில் அத்திருமணம் பிரித்து வைக்கப்பட வேண்டும்.

எனவே திருமணத்தில் இருவரது சம்மதமும் கட்டாயம் பெறப்படவேண்டும் என மேற்கூறிய அல்குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் குறிப்பிடுகின்றன. இவ்வாறு மணமக்கள் தங்களது துணையைத் தெரிவு செய்யும் போது அவர்களது குடும்ப வாழ்வு மிகவும் சந்தோஷமாக அமைவதற்கு அதிக வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

## 1.2 மணப்பெண்ணைத் தேர்வு செய்தல்

ஓர் ஆண் தனக்குரிய துணையைத் தெரிவு செய்யும் போது அப்பெண் எப்படி இருக்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது. ஒரு ஆண் நல்லொழுக்கமுள்ள ஒரு பெண்ணையே திருமணம் முடிக்க வேண்டும். ஒரு பெண்ணைத் தெரிவு செய்யும் விடயத்தில் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் பின்வரும் விடயங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

### 1.2.1 மார்க்கப்பற்று

இறை நம்பிக்கையும் மறுமை பற்றிய விசுவாசமும் இல்லாத ஒருவரிடம் நற்பண்புகளையோ நன்னடத்தையையோ எதிர்பார்க்க முடியாது. இந்த வகையில் துணைத் தெரிவில் மார்க்கப் பற்று கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

அபூ ஹுறைறா (றழி) அறிவிக்கிறர்ரகள் : இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான்கு நோக்கங்களுக்காக ஒரு பெண் மணமுடிக்கப்படுகிறாள்: 1.அவளுடைய செல்வத்திற்காக 2. அவளுடைய குடும்பப் பாரம்பரியத்திற்காக. 3. அவளுடைய அழகிற்காக 4. அவளுடைய மார்க்க (நல்லொழுக்க)த்திற்காக. எனவே, மார்க்க (நல்லொழுக்க)ம் உடையவளை (மணந்து) வெற்றி அடைந்து கொள்! (ஹீஹுல் புகாரி : 5090, ஸஹீஹ் முஸ்லிம் : 2905)

மார்க்கப் பற்றுள்ள பெண்ணைத் தேர்ந்தெடுப்பதால், அல்லாஹ்வும், அல்லாஹ்வின் தூதரும் கூறும் முறைப்படியும் இறையச்சமுடையவளாகவும் தன் பொறுப்புகளை உணர்ந்தவளாகவும் செயற்படுவாள். சிறந்த மனைவி அமைவதே ஒரு மனிதன் பெறும் மிகப்பெரிய பேறாகும். நபியவர்கள் கூறியதாக ஸஃது பின் அபீவக்காஸ் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ‘நான்கு விடயங்கள் மகிழ்ச்சியைக் கொண்டு வரக்கூடியது: அவை நல்ல மனைவி, போதுமான இருப்பிடம், நல்ல அண்டை வீட்டான், நல்ல வாகனம் என்பனவையாகும்.’ (இப்னு ஹிப்பான் : 4094, ஸுனன் பைஹகீ 9021)

அப்துல்லாஹ் இப்னு அம்ரிம்னு ஆஸ் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'உலகம் ஒரு செல்வமாகும். அந்த செல்வங்கள் அனைத்திலும் சிறந்தது நல்லொழுக்கமும் நற்பண்பும் மிக்க நல்ல பெண்மணியாவாள்' (ஸஹீஹ் முஸ்லிம் : 2911)

இறையச்சம், மரக்கப்பற்று, நல்லொழுக்கம் உள்ள பெண்ணே சிறந்த மனைவியாகத் திகழ முடியும் என்பதை மேற்கண்ட நபிமொழிகளிலிருந்து அறியலாம். அழகும் அடக்கமும் பணிவும் கட்டுப்பாடும் நம்பிக்கையும் விசுவாசமும் கொண்ட ஒரு பெண்ணே இஸ்லாமிய நோக்கில் நல்ல பெண்ணாக கொள்ளப்படுகின்றாள்.

### 1.2.2 குழந்தைப் பாக்கியம்

பிள்ளைப் பாக்கியமென்பது இறைவன் தான் நாடியோருக்கு வழங்கும் விஷேட அன்பளிப்பாகும். இதனையே அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது : "வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது; அவன் நாடியதைப் படைக்கிறான்; தான் நாடியோருக்குப் பெண்(குழந்தை)களை வழங்குகிறான்; தான் நாடியோருக்கு ஆண்(குழந்தை)களை வழங்குகிறான்; அல்லது ஆண்களையும் பெண்களையும் சேர்த்து அவர்களுக்கு வழங்குகிறான்; தான் நாடியோரை மலடாக ஆக்குகிறான்; அவன் அறிந்தவன் ஆற்றலுடையவன்." (அல்குர்ஆன் : 42:49,50)

சந்ததியை விருத்தி செய்தல் திருமணவாழ்வின் நோக்கங்களுள் ஒன்றாகும். எனவே ஒருவர் தனக்குரிய துணையைத் தெரிவு செய்கின்ற போது குழந்தைகளைப் பெறக்கூடிய பெண்ணைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதும் பரிந்துரைக்கப்படுகின்ற ஒரு விடயமாகும். இது பற்றி குறிப்பிடும் ஒரு ஹதீஸ் பின்வருமாறு: 'அதிக அன்பும் குழந்தைப் பேறும் கொண்ட பெண்களை மணமுடிப்பீர்களாக. மறுமையில் நான் ஏனைய சமூகங்களுக்கு முன்னால் உங்களது எண்ணிக்கையை வைத்து பெருமைப்படுவேன்.' (ஸுனன் அபூதாவூத் : 2050, முஸ்தத்ரக் அல் ஹாகிம் : 2685)

மறுமையை இலக்காகக் கொண்டு துறவறம் மேற்கொள்வதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. ஏனெனில் இஸ்லாமிய மார்க்கம் முழுமையாகப் பின்பற்றப்படுவது என்பது நபியவர்களின் வழிகாட்டுதலில் நின்றும் உள்ளதாகும். உலகத்தை முற்றாக வெறுத்து நபியவர்களின் வழிகாட்டுதல்களைப் புறக்கணித்து விட்டு மறுமை வெற்றியை எதிர்பார்க்க முடியாது. எனவேதான் நபியவர்கள் துறவறத்தை எச்சரித்து திருமணத்திற்கும் குடும்ப வாழ்க்கைக்கும் ஆர்வமூட்டியதோடு அதிகம் குழந்தைகள் பெறக்கூடிய பெண்ணை திருமணத்திற்காகத் தெரிவு செய்யும் படியும் ஏவினார்கள். ஒரு பெண் குழந்தைப் பேறுடையவளா என்பதை அவளது குடும்பத்தில் திருமணம் முடித்துள்ள ஏனைய பெண்களை வைத்து அறிந்து கொள்ள முடியும்.

### 1.2.3 அழகு

அழகை விரும்புவது மனிதர்களின் இயல்பான பண்பாகும். அழகுணர்ச்சி என்பது அல்லாஹ்வின் பண்பாகவும் கருதப்படுகின்றது. இதற்கு பின்வரும் நபி மொழி ஆதாரமாக விளங்குகின்றது. 'நிச்சயமாக அல்லாஹ் அழகானவன். அவன் அழகையே நேசிக்கின்றான்' (ஸஹீஹ் முஸ்லிம் : 147)

அழகு என்பது ஒவ்வொருவரதும் பார்வை, நோக்கு, இரசனை, விருப்பு, வெறுப்பு முதலானவற்றைப் பொறுத்து வேறுபடும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்த வகையில் திருமணத்தின் போதும் ஒருவர் தனது துணையின் அழகைக் கவனத்திற் கொள்வது பிழையானதல்ல. 'ஒரு முறை அல்முகீரா இப்னு ஷு.்.பா (றழி) என்ற நபித்தோழர் ஒரு பெண்ணைத் திருமணம் முடிக்க முன்வந்து நபியவர்களிடம் அது பற்றிக் குறிப்பிட்ட போது அவர்கள் பின்வருமாறு ஆலோசனை கூறினார்கள். நீர் போய் அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டும். அதுவே உங்கள் இருவர் மத்தியிலும் அன்பும் பிணைப்பும் நிலைப்பதற்கு வழியமைக்கும்.' (ஜாமிஉத் திர்மிதி : 1007, ஸுனன் நஸாயீ : 3183, ஸுனன் இப்னுமாஜா : 1855)

நபி (ஸல்) அவர்கள் சிறந்த, ஸாலிஹான பெண்ணுக்கு பின்வருமாறு வரைவிலக்கணம் சொன்னார்கள். "நீ அவளைப் பார்த்தால் உன்னை மகிழ்விப்பாள். நீ அவளுக்கு கட்டளையிட்டால் உடன் கட்டுப்படுவாள். நீ அவளை வைத்து சத்தியம் செய்தால் அதனை நிறைவேற்றி வைப்பாள். நீ வீட்டில் இல்லாத போது தன்னையும் உன் பொருளையும் பாதுகாத்துக் கொள்வாள்.'' (ஸுனன் நஸாயீ : 8690)

எனவே திருமணம் முடிக்க பெண் தேடும் ஒரு ஆண் அழகான பெண்ணைத் தேடுவதில் குற்றமில்லை. எனினும் நல்லொழுக்கமுள்ள பெண்ணாக அவள் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

### 1.2.4 கன்னிப் பெண்

திருமணத்திற்காகப் பெண் தேடுகின்றவர்கள் தங்களது விருப்பப்படி மணமகளைத் தேர்வு செய்வதற்கு அவர்களுக்கு சுதந்திரம் இருக்கின்றது. ஒரு ஆண் கன்னிப் பெண்ணைத்தான் தெரிவு செய்ய வேண்டும் என்பது நிபந்தனையல்ல என்றாலும் அது பரிந்துரைக்கப்படுகின்ற ஒரு விடயமாகும்.

ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (றழி) அறிவித்தார் : என் தந்தை இறக்கும் போது எனது சகோதரிகளான ஏழு பெண் குழந்தைகளை விட்டுச் சென்றார்கள். நான் திருமணம் முடித்த பின்னர் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம், ஜாபிரே! நீ மணமுடித்துக் கொண்டாயா? என்று கேட்டார்கள். நான் 'ஆம்' என்று சொன்னேன். அவர்கள், 'கன்னிப் பெண்ணையா? விதவைப் பெண்ணையா' (யாரை மணந்தாய்)? என்று கேட்டார்கள். நான் 'விதவைப் பெண்ணைத் தான்' என்று பதிலளித்தேன். நபி (ஸல்) அவர்கள், கன்னிப் பெண்ணை மணந்து, நீ அவளுடனும் அவள் உன்னுடனும் கூடிக் குலாவி விளையாடலாமே, நீ

அவளுக்கும் அவள் உனக்கும் மகிழ்வூட்டலாமே! என்று கூறினார்கள். அதற்கு நான் நபி (ஸல்) அவர்களிடம், (என் தந்தை) அப்துல்லாஹ் (றழி), பல பெண் மக்களை விட்டு விட்டு இறந்து விட்டார்கள். (வயதில்) அந்தப் பெண் மக்களைப் போன்ற ஒரு (இளம் வயதுப்) பெண்ணை (மணமுடித்து) அவர்களிடம் அழைத்துச் செல்வதை நான் விரும்பவில்லை. எனவே, நான் அவர்களைப் பராமரித்துச் சீராட்டி வளர்க்கும் (அனுபவமுள்ள) ஒரு பெண்ணை மணந்து கொண்டேன் என்றேன். அப்போது நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ் உனக்கு சுபிட்சத்தை அளிப்பானாக என்று கூறினார்கள் (ஸஹீஹுல் புகாரி : 5367, ஸஹீஹ் முஸ்லிம்: 2908, ஜாமிஉத் திர்மிதி : 1019)

## 1.3 மணமகன் தேர்வும் சம்மதம் பெறலும்

ஓர் ஆண் திருமணத்திற்காக மணப்பெண்ணைத் தெரிவு செய்வதற்கு உரிமை பெற்றிருப்பதைப் போன்றே பெண் தனக்குரிய கணவனைத் தெரிவு செய்யும் சுதந்திரத்தை இஸ்லாம் பெண்ணுக்கு வழங்கியுள்ள அதேவேளை தனது பொறுப்பிலுள்ள பெண்ணுக்கு பொருத்தமான கணவனைத் தெரிவு செய்து கொடுப்பது பொறுப்புதாரியின் கடமையாகும். எனவே கெட்டவன், பாவி, மதுப்பழக்கம் உடையவன், திருடன், அநியாயக்காரன் போன்றோரை மணமகனாகத் தெரிவு செய்வது பொறுப்புதாரி செய்யும் அநியாயமாகும். இது குடும்ப உறவுகள் துண்டிக்கப்படவும் காரணமாகலாம். இத்தகைய பொறுப்புதாரி நபியவர்களால் சபிக்கப்பட்டுள்ளான்.

ஆயிஷா (றழி) அவர்கள் கூறினார்கள்: திருமணம் ஒரு மிருதுவான விடயம். ஒருவர் நல்ல இடத்தில் பார்த்து தனது மகளை திருமணம் செய்து கொடுக்கட்டும். எவர் தனது மகளை ஒரு பாவிக்கு திருமணம் முடித்து வைக்கின்றாரோ அவர் இரத்த பந்தத்தைத் துண்டித்தவராவார். (ஸுனன் பைஹகி : 12605)

மார்க்கப் பற்றும் நற்குணமும் உடைய ஒருவர் பெண் கேட்டும், அவருக்குப் பெண் கொடுக்காமல் வெறும் பணம், பதவி, பாரம்பரியம் ஆகியவற்றைப் பார்த்து மட்டும் பெண் கொடுக்கும் போது கலகமும், குழப்பங்களும் ஏற்படும். பணம், பதவி ஆகியவற்றை மட்டுமே பாரத்துப் பெண் கொடுக்கும் நிலை தோன்றினால் ஆண்களிலும், பெண்களிலும் பலருக்கு வாழ்க்கைத் துணை கிடைக்காத தேக்க நிலை ஏற்படலாம். இதையடுத்து நாட்டில் விபச்சாரம் அதிகரித்து பெற்றோரின் சுய மரியாதைக்குப் பங்கம் ஏற்படலாம். இதன் மூலம் பிளவும், கலகமும் குழப்பமும் உருவாகும்.

ஒரு பெண்ணும் தனக்குரிய வாழ்க்கைத் துணைவனைத் தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றிருக்கிறாள். 'ஒரு விதவையை அவளது முடிவு பெறப்படாமல் திருமணம் செய்து வைத்தலாகாது. கன்னிப் பெண்ணையும் அவளது சம்மதத்தைப் பெறாமல் திருமணம் செய்து வைக்கக் கூடாது என்பது நபியவர்களின் கட்டளையாகும். நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியபோது அல்லாஹ்வின் தூதரே அவளது சம்மதம் எப்படி பெறப்படல் வேண்டும் என

ஸஹபாக்கள் வினவியபோது நபி (ஸல்) அவர்கள் “அவளது மௌனமே அவளது சம்மதமாகும் என்றார்கள்’ (ஸஹீஹுல் புகாரி : 6968) என அபூஹுறைறா (றழி) அறிவிக்கிறார்கள்.

‘ஒரு விதவை அவளது பொறுப்புதாரியை (வலி) விட அவளது விவகாரத்தைத் தீர்மானிக்கக் கூடிய அருகதையும் தகுதியும் உடையவளாவாள். ஒரு கன்னிப் பெண்ணைப் பொறுத்த வரையில் அவளது சம்மதம் கோரப்படல் வேண்டும். அவளது மௌனமே அவளது சம்மதமாகும்’ (ஸஹீஹுல் புகாரி : 6971)

ஹன்ஸா பின்த கிதாம் அல்அன்ஸாரியா என்ற விதவைப் பெண்ணை அவளின் தந்தை அவளது விருப்பத்திற்கு மாற்றமாக ஒருவருக்கு மணம் முடித்து வைத்தார். அப்பெண் இது பற்றி நபியவர்களிடம் முறைப்பாடு செய்யவே அன்னார் அத்திருமணத்தை செல்லுபடியற்றதாக ஆக்கினார்கள். இதனை சம்பந்தப்பட்ட அந்தப் பெண்ணே பின்வருமாறு கூறுகின்றார். ‘விதவையாயிருந்த என்னை என் தந்தை (ஒருவருக்கு) எனது விருப்பமில்லாமல் மணமுடித்து வைத்தார்கள். எனவே, நான் நபி (ஸல்) அவர்களிடம் முறையிட (என் தந்தை முடித்து வைத்த) அத்திருமணத்தை நபி (ஸல்) அவர்கள் ரத்துச் செய்தார்கள்.’ (ஸஹீஹுல் புகாரி : 6945)

மேற்கண்ட ஹதீஸ்கள், தான் விரும்பாத தனக்கு திருப்தி இல்லாத ஒருவரை மணம் முடித்து வைக்க பொறுப்புதாரர் முனைகின்ற போது அதனை மறுக்கின்ற, நிராகரிக்கின்ற உரிமை ஒரு பெண்ணுக்கு உண்டு என்பதைக் காட்டுகின்றன. உண்மையில் தகப்பனோ அல்லது வலி ஆக இருப்பவரோ ஒரு பெண்ணை அவள் விரும்பாத ஓர் ஆணுக்கு நிர்ப்பந்தித்து மணம் முடித்துக் கொடுக்கும் உரிமையைப் பெற்றவர் அல்ல.

ஏலவே திருமணம் முடித்து பின்னர் விதவையான ஒரு பெண்ணைப் பொறுத்தவரையில் அவள் திருப்தி காணாத ஒருவருக்கு அவளை மணம் முடித்து வைப்பதற்கு எவருக்கும் எந்த உரிமையோ, அதிகாரமோ இல்லை. வயது வந்த ஒரு கன்னிப் பெண்ணைப் பொறுத்தவரையிலும் அவளையும் குறிப்பிட்ட ஓர் ஆணை மணம் முடிக்க நிர்ப்பந்திக்க முடியாது.

ஆயினும் ஒரு யுவதி அனுபவக் குறைவினாலும் முதிர்ச்சியின்மை காரணமாகவும் சிலபோது தனது வாழ்க்கைத் துணைவனைத் தெரிவு செய்வதில் தவறு இழைத்து விட வாய்ப்புண்டு. இதனால் இஸ்லாம் தனது பொறுப்பில் இருக்கும் யுவதிக்கான கணவனைத் தெரிவு செய்து மணமுடித்து வைக்கும் பொறுப்பை தந்தை அல்லது பொறுப்புதாரிக்கு வழங்கியுள்ளதோடு தனது பொறுப்புதாரியின் தெரிவை ஏற்கும் உரிமையையும் மறுக்கும் உரிமையையும் அந்தப் பெண்ணுக்கு அளித்துள்ளது. அவ்வாறே தகுதியற்ற, பொருத்தமற்ற ஒருவனைத் தனது பொறுப்பில் உள்ள பெண் தெரிவு செய்தால் அதனை நிராகரிக்கும் அதிகாரத்தை இஸ்லாம் பொறுப்புதாரிக்கு வழங்கியுள்ளது.

ஆயினும் இன்று நடைமுறையில் ஒரு பெண் தனக்குரிய கணவனை சுதந்திரமாகத் தெரிவு செய்யும் உரிமையை பல போது இழந்து விடுகின்றாள். அவளது விருப்பு, வெறுப்பை விட தாய், தந்தையின் விருப்பு, வெறுப்பே கூடிய முக்கியத்துவம் பெறுகின்றது. தான் விரும்பாத போதும் தந்தையின் விருப்பம், தாயின் தெரிவு என்பதற்காக ஒருவருக்கு வாழ்க்கைப்படும் நிலை பெண்களில் பலருக்கு ஏற்படுகின்றது. குடும்ப வாழ்க்கையில் பல்வேறு பிரச்சினைகளும் சிக்கல்களும் தோன்றுவதற்கு இது ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது.

ஒரு தகப்பனோ பொறுப்பாளியாக இருப்பவரோ வயது வந்த ஒரு கன்னிப் பெண்ணை திருமணத்திற்கு நிர்ப்பந்திக்க முடியாது. தகப்பனாயினும் அல்லது மற்றொரு வலியாயினும் திருமண விடயத்தில் அவளது சம்மதத்தைக் கோருதல் வேண்டும். அவள் உடன்பட்டாலேயே திருமண ஒப்பந்தம் செல்லுபடியாகும் என்பது மேற்கண்ட ஹதீஸ்களிலிருந்து தெளிவுபடுத்தப்படுகின்றது.

வயது, குடும்பப் பின்னணி, சமூக அந்தஸ்து, பொருளாதார நிலை ஆகியவற்றைக் கவனத்திற் கொள்ளலும் முக்கியமாகும். ''புரைதா (றழி) அறிவிக்கிறார்கள்: பாத்திமா (றழி) அவர்களை திருமணம் முடிப்பதற்காக அபூபக்ர் (றழி), உமர் (றழி) ஆகியோர் நபி (ஸல்) அவர்களிடம் பெண் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் அவர் சிறிய வயதுடையவர் என்று கூறி பாத்திமா (றழி) அவர்களை அலி (றழி) அவர்களுக்குத் திருமணம் முடித்துக் கொடுத்தார்கள்.'' (ஸுனன் நஸாயீ : 3020)

எனவே, ஒரு பெண்ணுக்குரிய மணவாளனைத் தெரிவு செய்யும் போது பெற்றோர் மிகவும் விழிப்புடனும் கவனமாகவும் நடந்து கொள்ள வேண்டும். தனது பொறுப்பில் உள்ள பெண் பிள்ளையின் சார்பில் அவளுக்குரிய மணவாளனைத் தெரிவு செய்யும் போது பொறுப்புதாரர் கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சங்களை இஸ்லாம் கோடிட்டுக் காட்டியுள்ளது.

இந்த வகையில் ஒருவர் தன் கீழ் இருக்கும் பெண்ணுக்கு ஒரு பாவியையோ அல்லது அநியாயக்காரனையோ அல்லது குழப்பவாதியையோ திருமணம் செய்து வைப்பது பெரும் குற்றமாகும். பிழையான தெரிவைச் செய்ததற்காக அவர் அல்லாஹ்வின் கோபத்திற்கும் சாபத்திற்கும் உற்பட வேண்டியிருக்கும். பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த உரிமையினால் பெண்கள் ஏமாற்றப்படவோ, பாதிக்கப்படவோ கூடாது என்பதற்காக தந்தை, சகோதரன், தலைவர் போன்ற பொறுப்பாளர்களிடம் பெண்கள் தமது விருப்பத்தைத் தெரிவித்து அவர்கள் மூலமாகவே திருமணம் செய்ய வேண்டும் என்ற பாதுகாப்பையும் இஸ்லாம் வழங்கியுள்ளது.

இஸ்லாத்தின் நெறிமுறைகளை மீறாத வகையில் பெண்கள் தங்களது வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்தால் அந்தப் பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள உரிமையைப் பறிக்காமல் அவர்களுக்கு திருமணம் செய்து வைப்பது பெற்றோர் அல்லது பொறுப்பாளர்களின் கடமையாகும். சுருங்கக் கூறின் ஒரு பெண்ணுக்குரிய மணவாளனை தெரிவு செய்யும் போது மார்க்கப்பற்று, நல்லொழுக்கம், நன்னடத்தை, சன்மார்க்கக்

கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றல், பாவங்களைத் தவிர்ந்து நடத்தல் போன்றவை கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

### 1.4 மணப் பெண்ணை நேரில் பார்த்தல்

ஒருவர் தான் திருமணம் முடிக்கவிருக்கும் பெண்ணை நேரில் பார்ப்பதற்கு இஸ்லாம் அனுமதி வழங்கியுள்ளது. மணக்கவிருக்கும் பெண்ணைத் திருமணத்தற்கு முன்பே பார்த்துக் கொள்வதால் இருவரிடையே இணக்கம், அன்பு, புரிதல் ஆகியவை உருவாக வாய்ப்பு ஏற்படும். இதனால் திருமணத்திற்குப் பின் பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

நபித்தோழர் முகீரா (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ''நான் ஒரு பெண்ணை மணமுடித்துக் கொள்ளப் பேசியிருந்தேன் (நிச்சயித்திருந்தேன்). இதனை அறிந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீர் அப்பெண்ணைப் பாா்த்துக் கொள்வீராக: ஏனெனில், அது உங்களிருவருக்கிடையே அன்பையும், நட்பையும், இணக்கத்தையும் ஏற்படுத்தும் என நபி (ஸல்) அவர்கள் அறிவுரை பகர்ந்தார்கள். (ஜாமிஉத் திர்மிதி : 1007)

ஓர் ஆண் திருமணம் செய்யக் கருதி ஒரு பெண்ணை அதற்காக விசாரித்து அறிந்த பிறகு அவன் அவளைப் பார்க்க வேண்டும். திருமண ஏற்பாடுகள் தொடங்குவதற்கு முன்பே அவனுக்கு அப்பெண்ணை நுட்பமாகப் புரிந்து கொள்ளவே இந்த ஏற்பாடு. ஏமாற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கவும் விருப்பமில்லாதவற்றில் விழாமல் இருக்கவும் இது உதவும். இல்லற வாழ்வு பாதுகாப்பாக அமைய, மகிழ்ச்சியான குடும்ப வாழ்வு அமைய முன்கூட்டியே இருவரும் பார்த்துக் கொள்வதும், புரிந்து கொள்வதும் உதவியாய் அமையும்.

தன் இல்லத் துணையாக வர இருப்பவளின் உடல் நிலையைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் திருமண வாழ்வில் இணைந்தால் அது பல பிரச்சினைகளுக்குக் காரணமாக அமையும். அதனால்தான் இஸ்லாம் பெண்ணைத் திருமணத்திற்கு முன்னர் நேரில் பார்ப்பதை அனுமதிக்கிறது.

மணப் பெண்ணைப் பார்க்காமல் மணம் செய்து பின்னர் தமது எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாமல் ஏமாற்றமடைந்து விட்டால், குடும்ப வாழ்க்கையே பாதிப்படைந்து விடும். எனவேதான், பின்விளைவுகளைத் தவிர்க்க முன்கூட்டியே மணமகன் மணப் பெண்ணைப் பார்க்கவும் மணமகள் மணமகனைப் பார்க்கவும் இஸ்லாம் அனுமதி வழங்குகின்றது. ''மேலும், மு.ஃமினான பெண்களுக்கு நீர் கூறுவீராக! தங்கள் அலங்காரத்தை (சாதாரணமாக வெளியில்) தெரியக்கூடிய (கை, முகத்)தைத் தவிர (வேறு எதையும் வெளியே காட்டலாகாது.) (அல்குர்ஆன்: 24:31)

மேற்கூறிய இறைவசனம் மணமுடிக்கும் மணமகன் பெண்ணை நேரில் பார்க்க விரும்பினால், அனுமதிக்கப்பட்ட அவளது முகம், முன் கைகளை மட்டுமே பார்க்கலாம் என்பது தெளிவாகிறது. எனினும் அறிஞர்களிடையே எந்த இடங்களைப் பார்க்கலாம் என்ற விடயத்தில் கருத்து வேறுபாடுகள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், அப்பெண்ணை நேரில் பார்க்கும்போது, அவளை மணக்கத் தடை விதிக்கப்பட்ட மஹ்றமான ஒருவரையும் இருக்கச் செய்ய வேண்டும். அப்பெண்ணுடன் தனிமையில் இருக்கக்கூடாது. இப்னு அப்பாஸ் (றழி) அறிவிக்கிறார்கள் ''ஒரு பெண்ணுடன் எந்த (அன்னிய) ஆடவனும் தனிமையில் இருக்கலாகாது. (மணமுடிக்க தகாத) நெருங்கிய உறவினருடன் (அவள்) இருக்கும் போது தவிர'' என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹுல் புகாரி : 5233)

''உங்களில் ஒருவர் (திருமணம் செய்ய) தடுக்கப்பட்ட ஒருவர் இல்லாமல் தனிமையில் ஒரு பெண்ணுடன் இருக்க வேண்டாம். (அப்படி இருந்தால்) அவ்விருவருடன் மூன்றாவது நபராக ஷைத்தான் உள்ளான்' (முஸ்னத் அஹ்மத் : 109, ஸுனன் நஸாயீ : 8945) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவ்வாறே ஜாபிர் (றழி) அவர்கள் கூறினார்கள்: நபியவர்கள் சொன்னதை நான் கேட்டேன்.'யார் ஒருவர் பெண்ணை நிச்சயிக்க முற்படுகிறாரோ அவர் அவளின் சில உறுப்புக்களை பார்க்க முடியுமானால் பார்த்துக் கொள்ளட்டும்' (ஸுனன் அபீதாவுத் : 2082)

ஆகவே மணப்பெண்ணைத் தேர்ந்தெடுக்கும் ஒருவர் முதலில் மார்க்கப் பற்றும் ஒழுக்கமும் மிக்க பெண்ணாக தேர்ந்தெடுத்து அவளை நேரிலும் பார்த்து அதன் பிறகே திருமணம் செய்ய வேண்டும் என்பதை நபி மொழிகளிலிருந்து அறியலாம். இவ்வாறு பல செய்திகள் நபியவர்களைத் தொட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளமையால் பெண்ணைப் பார்ப்பது ஆகுமாக்கப்பட்ட ஒன்றாகும்.

## 1.5 முடிவுரை

திருமணத்திற்காக மணமக்களைத் தெரிவு செய்யும்போது பின்பற்றப்படவேண்டிய ஒழுங்கு முறைகளும் வழிகாட்டல்களும் இஸ்லாத்திலே மிகத் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளன. இவ்வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுமிடத்து சந்தோஷமான, திருப்தியான குடும்ப வாழ்வு அமையப்பெறும். தற்பொழுது இடம்பெறுகின்ற விவாகரத்துக்களுக்குரிய காரணங்களை ஆராயும் போது மணமக்களைத் தெரிவு செய்வதில் கவனிக்கப்படவேண்டிய விடங்கள் பின்பற்றப்படாமையும் இவ்விடயத்தில் தாக்கம் செலுத்துகின்றன. பெண் அழகில்லை, உடற்பருமன், குழந்தைப்பாக்கியமின்மை, கெட்ட நடத்தைகள், தொடர்புகள், தனக்கேற்ற ஜோடிப்பொருத்தமின்மை என்பன ஆண் தரப்பிலிருந்தும் மது மற்றும் போதைவஸ்துப் பாவனை, உடல் திருப்தியை வழங்கமுடியாமை, கெட்ட நடத்தைகள், தொடர்புகள் போன்றவை பெண் தரப்பிலிருந்து கூறப்படுகின்ற சில காரணங்களாகவும் கண்டறியப்பட்டுள்ளன. பெற்றோர்களின் அதீத தலையீடு காரணமாக பொருளாதார ரீதியான

பொருத்தப்பாடுகள், வயது மற்றும் இங்கு பரிந்துரைக்கபட்ட விடயங்கள் பின்பற்றப்படாமையே அதிகமான விவாகரத்துக்களுக்கு காரணமாக அமைந்துள்ளன. இரு தரப்பாருடைய சம்மதத்துடனும் திருப்தியுடனும் திருமணம் இடம்பெறுகின்ற போது குடும்ப வாழ்க்கையில் விரிசல்களோ, சச்சரவுகளோ, புரிந்துணர்வின்மையோ ஏற்படுவது தவிர்க்கப்படும். இதன் மூலம் சமூகத்தில் இடம்பெறுகின்ற விவாகரத்துக்களின் எண்ணிக்கை குறைவடைய வாய்ப்புகள் ஏற்படும். அதேபோன்று ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டாலும் இருவரது முழு சம்மதத்துடன் திருமணம் இடம்பெற்றிருக்குமாயின் வேறு எவர் மீதும் பழி போட்டுவிட்டு தாம் தப்பித்துக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையே காணப்படும். எனவே திருமண வாழ்வில் மணமக்கள் தேர்வும் சம்மதம் பெறலும் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இங்கு குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்கள் ஒரு சந்தோஷமான, திருப்தியான குடும்ப வாழ்க்கைக்கு இன்றியமையாத விடயங்களாகக் குறிப்பிட முடியும்.

**உசாத்துணைகள்**


1. Majeed, M.H.A. (2006). Gift to Bride. New Delhi, Islamic Book Service.
2. Majeed, M.H.A. (2012). A Gift for Muslim Groom. New Delhi, Idara impex.
3. Palanpuri, M E. (1993). Kitabun Nikah. New Delhi, Idara isha'at-E- Dinniyat (P) Ltd.
4. Sallie, A. (2000). Kitab – un – Nikah. New Delhi, Islamic Book Service.
5. Thanavi, A.A. (2012). A Gift for Muslim Couple. New Delhi, Islam Kitab Ghar.
6. Uthman, M R. (1995). The Laws of marriage in Islam. London, Dar Al Taqwa Ltd.
7. அல்ஹஜ்ஜாஜ், முஸ்லிம். (2004). ஸஹீஹ் முஸ்லிம். (மொ.பெ), சென்னை, றஹ்மத் பதிப்பகம்.
8. ஈஸா, முஹம்மது. (2012). ஜாமிஉத் திர்மிதி. (மொ.பெ), சென்னை, றஹ்மத் பதிப்பகம்.
9. கஸ்ஸாலி, (2010). திருமணம் - இஹ்யா உலுமுத்தீன். அப்துல் வஹ்ஹாப், (மொ.பெ), சென்னை, யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்.
10. கஸீர், இஸ்மாயீல் (2003). தப்ஸீர் இப்னு கஸீர். (மொ.பெ), சென்னை, றஹ்மத் பதிப்பகம்.
11. புகாரி, இஸ்மாயீல். (1999). ஸஹீஹுல் புகாரி. ஐந்தாம் பாகம், (மொ.பெ), சென்னை, றஹ்மத் பதிப்பகம்.
12. முஹம்மது யூஸுப், எஸ்.பி. (2008). இஸ்லாமிய திருமணம். சென்னை, சாஜிதா புக் சென்டர்.
13. ஜமாலுத்தீன், ஏ. (2001). இஸ்லாத்தில் குடும்ப இயல். சென்னை, புர்கான் பப்ளிகேஷன்ஸ்.
14. ஹன்பல், அஹ்மத். (2012). முஸ்னத் அஹ்மத். (முதலாம் பாகம்),(மொ.பெ), சென்னை, றஹ்மத் பதிப்பகம்.